# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

## தமிழ்

வகுப்பு - நான்கு - ____________ நேரம்: 2மணி

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. 'பல்லாண்டு' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) பல் + லாண்டு ஆ) பல் + ஆண்டு இ) பல + ஆண்டு

2. 'நிழல் + ஆகும்' - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________

   அ) நிழல்ஆகும் ஆ) நிழலாகும் இ) நிழல்லாகும்

3. 'வெள்ளம் + என' - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________

   அ) வெள்ளம்என ஆ) வெள்ளமென இ) வெள்ளைமன

4. 'வந்தடைகிறது' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) வந்த + அடைகிறது ஆ) வந்து + அடைகிறது இ) வந்த + டைகிறது

5. 'மறந்துன்னை' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) மறந்து + துன்னை ஆ) மறந் + துன்னை இ) மறந்து + உன்னை

6. 'குருத்தோலை' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) குரு + தோலை ஆ) குருத்து + ஓலை இ) குரு + ஓலை

7. 'மணி + பயறு' - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ____________

   அ) மணிபயறு ஆ) மணிப்பயறு இ) மணபயறு

8. அன்பரசன், தன் தாத்தாவுடன் சென்ற இடம் ____________

   அ) கடைத்தெரு ஆ) திருவிழா இ) பூங்கா

9. 'ஆசி' - இச்சொல்லின் பொருள் ____________

   அ) மகிழ்ந்து ஆ) வாழ்த்து இ) புகழ்ந்து

10. 'செயலாக்கம்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

    அ) செயல் + ஆக்கம் ஆ) செயல் + லாக்கம் இ) செய + லாக்கம்

**II. பொருள் கூறுக.** 5 × 1 = 5

11. சங்ககாலம் இச்சொல் குறிக்கும் பொருள் __________(முச்சங்க காலம் / தற்காலம்)
12. இயற்பெயர் - இச்சொல் குறிக்கும் பொருள் __________ (இயல்பாக வரும் பெயர் / செல்லப்பெயர்)
13. ஒப்பார் - இச்சொல் குறிக்கும் பொருள் __________ (நிகரானவர் / சிறந்தவர்)
14. மிக்கார் - இச்சொல் குறிக்கும் பொருள் __________ (பகைவர் / பெரியோர்)
15. அகண்ட - இச்சொல் குறிக்கும் பொருள் __________ (குறுகியது / பரந்து விரிந்தது)

**III. எதிர்ச்சொல் தருக.** 5 × 1 = 5

16. ஒற்றுமை 17. பெரியோர் 18. காய்கள்
19. தோல்வி 20. சுத்தம்

**IV. பொருத்துக.** 5 × 1 = 5

| | | |
|---|---|---|
| 21. Talk less work more | - | நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது |
| 22. No pain no gain | - | மின்னுவதெல்லாம் பொன்னல்ல |
| 23. Good council has no price | - | பதறாத காரியம் சிதறாது |
| 24. Haste make waste | - | குறைவாகப் பேசு அதிகம் வேலை செய் |
| 25. All that glitters is not gold | - | உழைப்பின்றி ஊதியமில்லை |

**V. மனப்பாடப்பாடல்.** 1 × 4 = 4

26. ‘அன்னைத் தமிழே’ பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**VI. வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

27. புத்தக கண்காட்சிக்கு வருமாறு நண்பனுக்கு அழைப்பு விடுத்து கடிதம் வரைக.

**VII. எவையேனம் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

28. கரிகாலனின் இயற்பெயர் என்ன?
29. உனக்கு தெரிந்த பழமொழிகள் இரண்டினை எழுதுக.
30. ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?
31. முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க சிங்கத்தை என்ன செய்யக் கூறியது?
32. “ஆநெய்”, “பூநெய்” ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?
33. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
34. கல்லணை எந்த மாவட்டத்தில் உள்ளது?

VIII. **வினாக்களுக்கு ஏற்ப விடையளி.** 16

35\. அ) நீர் நிலைகளில் ஒன்று __________

ஐந்துக்கு பின் __________

ஆ) சாப்பிட உதவும் __________

கதவை நீயும் __________

(சொல் ஒன்று, பொருள் இரண்டு கண்டுபிடி)

36\. அ) ஆகா என்ன சுகம் தெரியுமா

ஆ) காய்கறிக்கடையில் வேண்டிய தக்காளி கத்தரி புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்.

(பொருத்தமான நிறுத்தற்குறி இடுக.)

37\. ஆ) தவறுக்கு எதிர்ப்பதம் __________

ஆ) தந்திரமான விலங்கு __________

(ஈரெழுத்து சொற்களால் நிரப்புக.)

38\. அ) ஆதிமனிதன் வாழ்ந்த ‘கை’ __________

ஆ) நெருப்பில் இருக்கும் ‘கை’ __________

இ) எதிரியிடம் கொள்ளும் ‘கை’ __________

ஈ) பெண்கள் அணியும் ‘கை’ __________

(இதற்கேற்ப முதலெழுத்தை மாற்றி வேறு சொல்லை எழுதுக.)

39\. அ) பறவை ஆ) மரம் இ) விளையாட்டு

ஈ) விலங்கு உ) பழம்

(தமிழக அரசு சின்னங்களை எழுதுக)

40\. அ) கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை

(பழமொழியை சரியாக எழுதுக.)